ISSN - 2235-9796


20 பக்கங்கள் : விலை 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 05 | ஓகஸ்ட் - 2016 | இழை - 59



சர்மிளா 08

ஒலிம்பிக் 13



பெண்ணியவாதி 07

**வாசக நெஞ்சங்களுக்கு...!**

வலையின் இதழ் 59 ஆவது இழையில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எப்படி சௌக்கிய மாக இருக்கிறீர்களா?

எந்நேரமும் பரபரப்பாகவே இயங்குகிறது இந்த உலகம் இன்னும் சிறிது நேரத்தில் மொத்த வேலைகளையும் முடித்து விட்டுத்தான் மறுவேலை என்பது போல், பம்பரமென பர பரத்துச் சுற்றிக்கொண்டிருக்கிறது.

வேலையை முடித்துவிடவேண்டுமே என்கிற பதற்றமும், சரியாக நடந்துவிட வேண்டுமே என்கிற தவிப்பும்தான் இந்த உலகின் மிக முக்கியமான எண்ணங்களாக இருக்கின்றன.

எண்ணம் என்னவோ சரிதான்! ஆனால், பதற்றமும், தவிப்பும் மனிதர்களின் மிக முக்கியமான எதிரிகள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் பதற்றம் இருக்கிற இடத்தில் தெளிவாகச் சிந்திக்க முடியாது. தெளிவாகச் சிந்திக்க முடியாத நிலையில், தீர்க்கமாக, நிதானமாக செயலாற்றவும், செயற்படுத்தவும் இயலாது.

இந்த நிலையில் அடுத்து என்னவாகும்? அதுவரை ஏறியிருக்கிற டென்ஷன் இரட்டிப்பாகும். இன்னும் படபடப்புக் கூடும். பதற்றமும், தவிப்பும் அதிகரிக்கும். இதயம் ஏகத்துக்குத் துடி துடிக்கும்.


சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்றொரு பழமொழி உண்டு. சட்டி என்கிற சிந்தனையில் தெளிவு இல்லாதபோது, அகப்பை என்னும் செயலில் மட்டும் எப்படித் தெளிவு வரும்?

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில்

எனது பணி தொடரும்... நன்றி. - 'வலை' வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...




- ✧ ஓகஸ்ட் - *01* - உலக தாய்ப்பால் தினம்
- ✧ ஓகஸ்ட் - *03* - உலக நண்பர்கள் தினம்
- ✧ ஓகஸ்ட் - *06* - உலக ஹிரோஷிமா தினம்
- ✧ ஓகஸ்ட் - *09* - உலக நாகசாகி தினம்
- ✧ ஓகஸ்ட் - *12* - உலக இளைஞர் தினம்
- ✧ ஓகஸ்ட் - *13* - உலக இடதுகைப் பழக்கமுடையோர் தினம்
- ✧ ஓகஸ்ட் - *18* - உலக உள்நாட்டு மக்களின் தினம்
- ✧ ஓகஸ்ட் - *19* - உலக புகைப்படப் பிடிப்பாளர் தினம்
- ✧ ஓகஸ்ட் - *19* - உலக மனிதாபிமான தினம்
- ✧ ஓகஸ்ட் - *21* - உலக நாகரிக தினம்
- ✧ ஓகஸ்ட் - *30* - உலக காணாமற் போனோர் தினம்

## இலங்கை பற்றிய சமகால வலை வீசலில்...

❐ இலங்கையில் விசேட தேவையுடையோர் எத்தனை இலட்சம் பேர் உள்ளனர் என சமூக சேவைகள் திணைக்களம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது?

26 இலட்சம்

இவர்களில் 57.7 வீதமானவர்கள் ஆண்கள், 42.3 வீதமானவர்கள் பெண்கள் ஆவார்.

❐ இலங்கையின் அபிவிருத்திக்கு 90 மில்லியன் கடன் வழங்கிய நாடு எது?

**ஜப்பான்**

❐ தாய்ப்பால் ஊட்டுதல் தொடர்பில் பன்னாட்டு ரீதியில் நடத்தப்பட்ட ஆய்வில் எந்த நாடு முதலிடம் பெற்றுள்ளது?

**இலங்கை**

மேற்படி ஆய்வு 121 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது. 2016 ஓகஸ்ட் 1-7 ஆம் திகதி வரை தேசிய பாலூட்டல் வாரம் இலங்கையில் அனுஷ்டிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

❒ இலங்கையில் தடை செய்யப்பட்ட களைநாசினிகளுக்கு மேலதிகமாக தற்போது தடை விதிக்கப்பட்டுள்ள களைநாசினி எது?
பஸ்டா குளுபோசினேட்

❒ *2015 ஆம் ஆண்டில் கடலுணவு ஏற்றுமதியின் மூலம் இலங்கை பெற்ற வருமானம் எவ்வளவு?* **2400 மில்லியன்**

❒ கொமர்ஷல் வங்கி அண்மையில் அறிமுகம் செய்துள்ள அதிநவீன கொடுப்பனவு முறை எது? பே மாஸ்ரர் (Pay Master)
கம்பனிகளின் ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக இது பரவலாகப் பாவிக்கப்படுகிறது. தமது வாடிக்கையாளர்களுக்கு தரகுகள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான பல்வேறு வகைக் கொடுப்பனவுகள் என்பவற்றுக்காகவும் இது பயன்படுகிறது.

❒ *2016 இல் இதுவரை (யூலை) ரயிலில் மோதி எத்தனை பேர் சாவடைந்துள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது?*
*250 பேர்*

❒ இதுவரை நீரிழிவு நோயினால் இலங்கையில் எத்ததனையாயிரம் பேர் உயிரிழந்திருப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக் கிளை அறிவித்துள்ளது?
*10 ஆயிரம் பேர்*

❒ நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட விவசாயக் கண்காட்சியின் தொனிப் பொருள் என்ன?
“சூழலியல் விவசாயத்தை நோக்கி”

❒ இந்த ஆண்டின் (2016 ஓகஸ்ட் வரை) இதுவரை எத்தனையாயிரம் பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது?
*34 ஆயிரத்து 773 பேர்*

❒ *2015 ஆம் வருடத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடு சென்றவர்களில் எத்தனை பேர் வெளிநாடுகளிலேயே உயிரிழந்துள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது?*
*600 பேர்*

- ❒ சீனாவின் முதலீட்டில் அம்பாந்தோட்டையில் அமையவுள்ள மிகப்பெரும் கைத்தொழில் வலயம் குறித்த ஆய்வுக்காக சீனா பயணமாகிய அமைச்சர் யார்?
  **கலாநிதி சரத் அமுனுகம**

- ❒ அண்மையில் இலங்கை வந்து சென்ற (22.08.2016) அமெரிக்க கடற்படைச் செயலர் யார்? **ரே மபுல்**

- ❒ கடந்த மூன்று ஆண்டுகளில் நாடு முழுவதும் எத்தனையாயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என சட்டமும், ஒழுங்கும் அமைச்சு அறிவித்துள்ளது?
  **9 ஆயிரத்து 657 பேர்**

- ❒ இந்த வருடம் (2016) இலங்கை வங்கி தனது எத்தனையாவது ஆண்டு நிறைவு தினத்தினை கொண்டாடியது?
  **77 ஆவது (1939 - 2016)**

- ❒ 2016 ஆம் ஆண்டுக்கான ஆசிய பொருளாதார மாநாடு எங்கே நடைபெற வுள்ளது?
  **கொழும்பில்**

- ❒ சமுர்த்தி முகாமையாளர்களுக்கு என்ன வழங்கப்படும் என சமூக வலுவூட் டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள் ளார்?
  **துப்பாக்கி**

- ❒ தொடர்ந்து 12 ஆவது வருடமாக அதிக மதிப்புவாய்ந்த வங்கியாக தரப் படுத்தப்பட்டுள்ள வங்கி எது?
  **கொமர்ஷல் வங்கி**

- ❒ ஆசிய கிரிக்கெட் கவுன்ஸிலின் (Asian Cricket Council) தலைமையகம் எந்த நாட்டில் அண்மையில் (20.08.2016) திறந்து வைக்கப்பட்டுள்ளது?
  **இலங்கையில் (கொழும்பில்)**

- ❒ இலங்கை கப்பல் சேவையாளர் சங்கம் தனது எத்தனையாவது வருடப் பூர்த்தியை அண்மையில் கொண்டாடியது?
  **50 ஆவது**

////////////////////////////////////////////////////////////////////////////////

- அண்மையில் (14.08.2016) இலங்கை வந்து சென்ற யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் யார்?
  **இரினா பொகோவா (Irina Bokova)**

- இந்த வருடத்தில் (2016) இதுவரை எத்தனை பேர் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்? ***153 பேர்***

- கல்விக்கு ஊனம் ஒரு தடையே இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை முடித்து வெளியேறியுள்ள மாணவன் யார்?
  **கசும் சாமர (இரண்டு கண்களும் செயலிழப்பு)**

- இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்துக்கு சர்வதேச அபிவிருத்தி உதவியின் கீழ் உலக வங்கி இலங்கைக்கு எவ்வளவு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது?
  ***100 மில்லியன்***

- வடமாகாண கடற்றொழில் அபிவிருத்திக்காக 60 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்துள்ள வங்கி எது?
  **ஆசிய அபிவிருத்தி வங்கி**
  வட பிராந்தியத்தில் “நிலைபேறான மீன்பிடி அபிவிருத்தித் திட்டம்” என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்படி நிதி ஒதுக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- இந்தோனேசியாவுக்கு அண்மையில் (03.08.2016) விஜயம் செய்திருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்களை அங்குள்ள மாளிகையில் வரவேற்பளிக்கப்பட்டது. அந்த மாளிகையின் பெயர் என்ன?
  **ஜகன்தா மர்டெகா**

- இலங்கை மதுபான மற்றும் புகையிலைக்கான தேசிய அதிகார சபையின் அறிக்கையின்படி இலங்கையில் அதிகரித்து வரும் மதுப்பாவனை ஐரோப்பிய நாடுகளையும் விட எத்தனை மடங்கு அதிகரித்துள்ளது?
  **5 மடங்கு**

- பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வயதெல்லை உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தீர்மாணிக்கப்பட்டுள்ளது? அந்த வயதெல்லை எவ்வளவு? **60 வயது**

////////////////////////////////////////////////////////////////////////////////////////

- தென்கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டுக்கு தனது ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட யானை குட்டி ஈன்றுள்ளது. அந்தக் குட்டிக்கு அவர் இட்ட பெயர் என்ன?
  **கொரிலங்கா**

- ஊடக நிறுவனம் ஒன்றின் அழைப்பில் போரில் 2015 ஆம் ஆண்டுக்கான உலக அழகி ஒருவர் (31.08.2016) இலங்கை வந்தார். அந்த அழகி யார்?
  **ஏஞ்சலியா ஒன்க்** (Angelia Ong)

## இலங்கையில் இன்று இவர்கள்...

- இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் யார்?
  **டரன் ஜித் சிங் அந்து**
  இதேவேளை, இலங்கைக்கான முன்னாள் இந்தியத்தூதுவராகக் கடமை யாற்றி வை.கே.சின்ஹா பிரிட்டனுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

- வெளிவிவகார அமைச்சின் செயலாளர் யார்? **எசல வீரக்கோன்**

- பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் யார்?
  **ஜே.ஜே.ரத்னசிறி**

- தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் யார்?
  **டீ.ஜீ.எம்.வி. ஹபுஆரச்சி**

- சட்டம் மற்றும் ஒழுங்கு தெற்கு அபிவிருத்தி அமைச்சர் யார்?
  **சாகல ரத்நாயக்க**

## உலகை நோக்கிய சமகால வலை வீசலில்...

- அண்மையில் (02.08.2016) கொங்ஹொங்கைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?
  **நிடா**

- அண்மையில் பிரமாண்டமான ஆய்வுகூடத்தை நிறுவிய பிரபல சமூக வலைத்தளம் எது?
  **பேஸ்புக்**

◇ ஒரு நாட்டின் ஜனாதிபதி தான் ஒரு பெண்ணியவாதி எனக் கூறினார். அந்த ஜனாதிபதி யார்?
**அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா**
கடந்த 04.08.2016 ஆம் திகதியன்று தனது 55 ஆவது பிறந்ததின நினைவுச் செய்திக் குறிப்பிலேயே அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

◇ உலகின் மிகப்பெரிய ஹோட்டல் எந்த நாட்டில் திறக்கப்படவுள்ளது?
**சவுதி அரேபியா**
இக்ஹோட்டலின் பெயர் : அப்ராஜ்குடாய், 10 ஆயிரம் அறை, 70 இற்கும் மேற்பட்ட விடுதிகள் என்பனவாகும். அடுத்த வருடம் திறக்கப்படவுள்ளது.

◇ 2016 செப்ரெம்பர் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு எங்கே நடைபெறவுள்ளது?
**வெனிசுவேலா**

◇ அதிகாலை வேளை (24.08.2016) நிலநடுக்கம் (ரிச்டர் 6.2) ஏற்பட்டு 38 பேர் பலியாகிய சம்பவம் எங்கு நடைபெற்றது?
**இத்தாலியில்**

◇ அண்மையில் சிகா வைரஸ் எந்த நாட்டினைத் தாக்கியுள்ளது?
**சிங்கப்பூர்**
41 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்

◇ பன்னாட்டு இசை நிகழ்ச்சி (2016 ஓகஸ்ட் 2ஆம் வாரம்) எந்த நாட்டில் நடைபெற்றது?
**ரஷ்யா - தலைவர் மொங்கோவில்**

◇ 52 ஆண்டுகளில் நிலவிய உள்நாட்டுப் போர் எந்த நாட்டில் தற்போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது?
**கொலம்பியா**

◇ உலகில் 12 ஆவது இஸ்லாமிய பொருளாதார மாநாடு எங்கே நடைபெற்றது? அதன் தொனிப்பொருள் என்ன?
**இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தா நடைபெற்றது.**
**"பொருளாதார வளர்ச்சியை பரவலாக்குதல் எதிர்கால வர்த்தகத்தை மேம்படுத்துதல்"**

//////////////////////////////////////////////////////////////////////

◈ ஈரானிய சர்ச்சைக்குரிய அணுசக்தி விஞ்ஞானி அண்மையில் தூக்கிலிடப் பட்டார். அவர் யார்?
**ஷஹ்ராம் அமிறி**

◈ உலகின் மிகவும் மெல்லிய மடிக்கணினியை அண்மையில் அறிமுகப்படுத் தியுள்ள நிறுவனம் எது?
**H.P**

◈ உலகின் பெண்மணி ஒருவரின் நீண்ட உண்ணாவிரதப் போராட்டம் அண்மை யில் (09.08.2016) முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அந்தப் பெண்மணி யார்?
**இரோம் சர்மிளா**
மணிப்பூரில் இராணுவத்துக்கு வழங்கப்பட்ட ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை (AFSPA) நீக்கக்கோரி 2000 ஆம் ஆண்டில் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கி 16 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலேயே தற்போது அவர் அவ் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு உத்தேசித்துள்ளார்.

◈ ஒரு தினத்தில் பூமியைத் தாக்கி அழிக்கக்கூடிய அபாயம் கொண்ட விண் கல்லின் (பூமியை நோக்கி வரவுள்ளதாக) பெயர் என்ன? **பென்னு**

◈ உலகில் மிகவும் உயரமான மற்றும் உலகின் நீளமான கண்ணாடிப் பாலம் அண்மையில் (20.08.2016) எந்த நாட்டில் திறந்து வைக்கப்பட்டது?
**சீனாவில்**
400 மீற்றல் நீளம், தரையிலிருந்து 300 அடி உயரமும் ஆனது.

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ நோர்வேயின் பிரதமர் யார்?
**எர்ணா சோல்பேர்க் (தலைநகரம் : ஒஸ்லோ)**

◎ பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர் யார்? **தோமஸ் பெச்**

◎ இந்தோனேசியாவின் ஜனாதிபதி யார்?
**கோகோ விடோ (தலைநகரம் : ஜகார்த்தா)**

◎ நேபாள நாட்டின் புதிய பிரதமர் யார்?
**புஷ்ப கமால் தஹால் (தலைநகரம் : கார்த்மண்டு)**

◎ இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிட இணைப்பாளராக அண்மையில் நியமனம் பெற்றவர் யார்?
**மெக்கௌலி**

## விளையாட்டு நோக்கிய சமகால வலை வீசலில்...

⊙ இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் பன்னாட்டு ஒரு நாள் ஆட்டங்களில் விரைவாக 100 இலக்குகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையைப் படைத்த வீரர் யார்?
**மிச்செல் ஸ்ராக் (ஆஸ்திரேலியா)**

⊙ இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள எம்.எஸ்.டோனி படத்தின் உரிமத்துக்காக அவருக்கு இந்திய மதிப்பில் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?
**80 கோடி**

⊙ கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கார், சேவாக் போன்றவர்களின் சாதனைகளை முறியடித்து அதிக தொடராட்ட நாயகன் விருதுகளைக் கைப்பற்றி புதிய சாதனை படைத்த வீரர் யார்?
**அஸ்வின்**

⊙ 2015, 2016 ஆம் ஆண்டு பருவ காலத்துக்கான சிறந்த ஐரோப்பிய கால் பந்தாட்ட வீரராக அறிவிக்கப்பட்டுள்ள வீரர் யார்?
றொனால்டோ (போர்த்துக்கல்)

## அயல்நாட்டு நோக்கிய சமகால வலை வீசலில்...

✧ அண்மையில் (15.08.2016) வரை தனது எத்தனையாவது சுதந்திர தினத்தை இந்தியா கொண்டாடியது?
**70 ஆவது**

✧ இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பயன்படுத்திய கோட் சூட் உலகிலேயே அதிக விலைக்கு ஏலம் போய் கின்னஸ் சாதனை படைத்தது. அத்தொகை எவ்வளவு?
**4 கோடியே 31 இலட்சத்து 31 ஆயிரத்து 311 ரூபா ஆகும்.**
குஜராத்தைச் சேர்ந்த தொழிலதிபர் துல்கி பாய் படேல் என்பவரே ஏலம் எடுத்துள்ளார்.

✧ உலகின் 10 பணக்கார நாடுகளின் பட்டியலில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது? 7 **ஆவது**
இதேவேளை, அமெரிக்கா முதலாவது இடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும், ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

✧ எவரெஸ்ட் சிகரத்தில் அண்மையில் ஏறி சாதனை படைத்த முதல் தமிழ் இராணுவ வீரர் யார்?
சிவகுமார் (வயது-35)

## விருதுகள் நோக்கிய சமகால வலை வீசலில்...

✧ நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்கும் பெண் தொழில்முனை வோர் கௌரவிப்பு விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொ ருவருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பெண்மணி யார்?
**திருமதி தயானா சந்துரு**

✧ இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை ஊடக நிறுவனம் ஆகியன இணைந்து நடத்திய விழாவில் சிறந்த ஊடகவியலாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சாதனையாளர்கள் யார்?
- **வீ.தனபாலசிங்கம்**
- **பியசேன இயலவிதான**
- **நெவில் டி சில்வா**
- **பிரேம சிறி அபேசிங்க**

✧ பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருதான செவாலியர் விருதுக்கு அறிவிக் கப்பட்டுள்ள இந்திய திரைப்பட நடிகர் யார்? **நடிகர் கமலஹாசன்**

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

⌖ பிரேசிலின் தங்கமகன் என்று அழைக்கப்படுபவர் யார்?
**பிலே (கால்பந்து ஜம்பாவான்)**

⌖ இலத்தீன் அமெரிக்க புரட்சியின் சின்னம் என்று அழைக்கப்படுபவர் யார்?
**பிடெல் காஸ்ரோ**
*2008 இல் தனது இளைய சகோதரர் ஃபிடெல் நாபுலிடம் அதிகாரத்தைக் கையளித்தார்.*

⌖ லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற கூட்டுறவு அனுபந்தத்தின் பெயர் என்ன?
**சமூப தீபனி**

⌖ சார்க் அமைப்பில் உள்ள நாடுகளிடையே உயர் எழுத்தறிவு வீதமுள்ள நாடு எது?
**மாலைதீவு**

⌖ உலகிலுள்ள சிறந்த துறைமுகங்களுள் கொழும்பு துறைமுகம் எத்தனையாவது இடத்தில் உள்ளது?
***26* ஆவது**

⌖ இலங்கையின் அரசியலமைப்பின் *19* ஆம் திருத்தச் சட்டத்துக்கு அமைய நிறுவப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது?
**ஒன்பது**

⌖ *01.07.2016* இல் *65* ஆவது வருட நிறைவைக் கொண்டாடிய கொழும்புத் திட்டத்தின் தொனிப்பொருள் என்ன?
**“கூட்டுச்சேர்ந்து சுபீட்சத்தை அடைதல்”**

⌖ இலங்கையில் *18* வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் முதன் முதலில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எந்த ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கப்பெற்றது?
***1960***

⌖ “நரகத்தில் இருந்து தப்பிவிடல்” என்ற நூலின் ஆசிரியர் யார்?
**சதாம் ஹுசைன்**

⌖ *2016 - 2020* ஆண்டு காலப்பகுதியில் சூழல் நேய பசுமை வீர கிராமங்கள் *10* ஆயிரத்தை நிறுவுவதற்கான அரசின் வேலைத்திட்டம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
**“தேசிய சகவாழ்வுக்கான கலந்துரையாடல்”**

⌖ இலங்கையின் தேசபிதா என அழைக்கப்படும், மதிக்கப்படும் மனிதர் யார்?
**டி.எஸ்.சேனநாயக்க**

⌖ மறைந்த மாமனிதர் நெல்சன் மண்டேலா எழுதி வெளியிட்ட நூல் எது?
**லோங் வோக் டு ப்ரீடம் (Long walk to freedom)**

//////////////////////////////////////////////////////////////////////

⌖ ‘வற்’ வரி என்ற சொல் மிக அண்மைக்காலமாக ஊடகங்களில் அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. இங்கு ‘VAT’ என்பதன் விரிவாக்கம் என்ன?
**VAT - Value Added Tax**

⌖ உலகின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதும், மரணத்தை ஏற்படுத்தக் கூடியதுமான நீரிழிவு நோய் உடலின் எந்த உறுப்பு பாதிக்கப்படுவதனால் ஏற்படுகிறது?
**சதையி**

⌖ இலங்கையின் அரச வர்த்தமானப் பத்திரிகை முதன் முதலாக வெளியிடப் பட்ட ஆண்டு எது?
***1802***
**இதேவேளை அரசாங்க அச்சுத் திணைக்களமே இலங்கை ஏக உத்தியோ பூர்வ அச்சாளராகவும், பிரசுரிப்பாளராகவும் திகழ்கின்றது.**

⌖ ஐ.நா.வின் தலைமைச் செயலகம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
**சுவிற்சர்லாந்தில்**

⌖ இலங்கைக்கு மீண்டும் புளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொடுப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்த அமைப்பு எது?
**ஐரோப்பிய ஒன்றியம்**

⌖ தற்போது உலக மக்கள் தொகை எவ்வளவு?
740 கோடி
**இதில் சீனா முதலாவது இடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் ஐக்கிய அமெரிக்கா மூன்றாவது இடத்திலும் உள்ளன.**
இதேவேளை, 2050 ஆம் ஆண்டில் உலக சனத்தொகை 1000 கோடியை எட்டிவிடும் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

⌖ உலக நாடுகளில் மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கு எதிராகச் செயற்படும் அரச சார்பற்ற சர்வதேச நிறுவனம் எது?
**சர்வதேச மன்னிப்புச் சபை**

⌖ இலங்கையின் கூட்டுறவு வளர்ச்சிக்கு உதவி வரும் நாடு எது?
**சுவீடன்**

⌖ சார்க் அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?
**காத்மண்டு**

## 2016 ரியோ ஒலிம்பிக்

01. ஒலிம்பிக் தீபத்தை ஏற்றியவர் யார்?
**டி.விமா (பிரேசிலின் முன்னாள் மரதன் ஓட்ட வீரர்)**

02. ஒலிம்பிக்கின் தொனிப்பொருள் என்ன? **'புதிய உலகம்'**

03. இலங்கை சார்பில் தேசியக் கொடியை ஏற்றியவர் யார்?
**அநுராதா இந்திரஜித் குரே (இலங்கை அணியின் தலைவர்)**

04. பிரேசிலின் ரியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடருக்கான உத்தியோக பூர்வ விளையாட்டு வைத்திய நடவடிக்கைகளுக்காக இலங்கையைச் சேர்ந்த இரு வைத்தியர்கள் வரலாற்றில் முதற்தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் யார்? - **ஹிமான் டி சில்வா, - தேபுவன ஆராச்சி**

05. இந்த வருடம் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி எத்தனையாவது? **31 ஆவது**

06. வில்வித்தைப் போட்டியில் உலக சாதனை படைத்த வீரர் யார்?
**கிம் வூ ஜின் (தென்கொரியா)**
700 புள்ளிகளைப் பெற்றார்.
இதற்கு முன்னர் லண்டன் ஒலிம்பிக்கில் (2012) சக நாட்டவர் இம் டோன் ஹியூன் 699 புள்ளிகள் பெற்றதே உலக சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

07. ரியோ ஒலிம்பிக் தொடருக்கான தீபத்தை கடைசியாகப் பெற்ற பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேதை அண்மையில் (07.08.2016) மாரடைப்பால் சாவடைந்தார். அவர் யார்? **இவோ பிதான்கய்**

08. ரியோ ஒலிம்பிக் தொடரில் 400 மீற்றர் தனிநபர் நீச்சலில் புதிய உலக சாதனை நிகழ்த்திய ஹங்கேரி வீராங்கனை யார்? **கதின்கா ஹோஸ்ஜு**

09. 92 வருடங்களின் பின்னர் ரியோவில் மீண்டும் நடைபெற்ற போட்டி எது?
ரக்பி

10. பழுதூக்கலில் உலக சாதனை படைத்த சீன வீரர் யார்? குஜிங் லோங்

11. 100 மீற்றர் நீச்சல் போட்டியில் 19 ஆவது தங்கப் பதக்கத்தையும் பெற்று மலைக்க வைத்துச் சாதனை படைத்த வீரர் யார்?
**மைக்கல் பெல்ப்ஸ் (அமெரிக்கா)**

12. ஒற்றையர் படகோட்டிப் போட்டியில் ஆசியாவிலேயே பதக்கம் வென்ற முதல் வீரர் யார்? **ரக்குயா (ஜப்பான்)**

13. ஹங்கேரியின் இம்புப் பெண் என அறியப்படும் நீச்சல் வீராங்கனை யார்? **கதின்கா**

14. ரியோ ஒலிம்பிக் போட்டியில் களமிறங்கிய தமிழ் குத்துச்சண்டை வீரர் யார்? **துளசி தர்மலிங்கம்**

15. ரியோ ஒலிம்பிக் போட்டியில் கிறிஸ்துவுக்கு முன்னைய காலத்தில் படைக் கப்பட்டதாகக் கருதப்பட்டு வந்த சாதனை நீச்சல் போட்டி மூலம் தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. அந்த வீரர் யார்?
**மைக்கேல் பெல்ப்ஸ் (அமெரிக்கா)**

16. உலக நீச்சல் சம்பியனான பெல்ப்ஸை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்ற சிங்கப்பூர் நீச்சல் வீரர் யார்?
**ஜோசப் ஸ்கூலிங்**

17. ஜிம்னாஸ்ரிக் போட்டியில் கடந்த 44 ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு ஒலிம்பிக் தொடரில் தங்கப் பதக்கம் வென்ற ஒரேயொரு வீரர் யார்?
**கோஹி உச்சிமுரா (ஜப்பான்)**

18. கடந்த 20 வருடங்களின் பின்னர் ஒலிம்பிக் தொடரில் சகலதுறைப் பிரிவில் (ஜிம்னாஸ்ரிக்) தங்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்த கறுப்பினப் பெண் யார்?
**சீமோன் பைல்ஸ் (அமெரிக்கா)**

19. கோலூன்றிப் பாய்தலில் சாதனை படைத்த தென்னாபிரிக்க வீரர் யார்?
**ரைங்கோ பிரிஸ்**

20. 105 கிலோ எடைப்பிரிவு பளுதூக்கலில் உலக சாதனை படைத்த வீரர் யார்? **லக்சா ரலக்ஸ்டி (ஜோர்ஜியா)**

21. பெண்களுக்கான மல் யுத்தத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை யார்? **சாக்சி மலிக்**

22. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்காக தனது வெள்ளிப் பதக்கத்தை விற்பனை செய்யவுள்ளதாக அறிவித்துள்ள வீரர் யார்?
**மலாச்செளங்கி (போலந்து)**

23. அடுத்த ஒலிம்பிக் போட்டி (2020) எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
**ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில்**

////////////////////////////////////////////////////////////////////////

24. வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி. சிந்துவுக்கு கார் பரிசளித்த இந்தியாவின் பிரபல கிரிக்கெட் நட்சத்திரம் யார்?
**சச்சின் டெண்டுல்கார்**

26. 1904 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் தொடரின் பின்னர் ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமான காலப்பகுதியாக புறக்கணிக்கப்பட்டு வந்த விளையாட்டு முதன்முறையாக இம்முறை சேர்க்கப்பட்டுள்ளது. அந்த விளையாட்டு எது?
**கோல்ப்**

27. குறைந்த வயது வீராங்கனையாகக் கலந்து கொண்ட வீரர் யார்?
**குர்கீரட் சிங்க (வயது-13) நேபாளம்**

28. ரியோ ஒலிம்பிக் தொடரில் முதலிடம் பிடித்த நாடு எது?
**அமெரிக்கா**

## இலங்கையில் இருந்து பங்குபற்றிய வீர, வீராங்கனைகளின் விபரம் ஒரே பார்வையில்...

| இல. | வீர, வீராங்கனைகள் | போட்டி விபரம் |
|---|---|---|
| 1 | நிலூக்கா கீதானி ராஜசேகர | மரதன் ஓட்டம் ஆண்கள் |
| 2 | அநுராத இந்திரஜித் குரே | மரதன் ஓட்டம் பெண்கள் |
| 3 | சுமேத ஜகத் ரணசிங்க | ஈட்டி எறிதல் ஆண்கள் |
| 4 | மங்கள சமரக்கோன் | குறிபார்த்துச் சுடுதல் |
| 5 | அன்ரன் சுரேஷ் பீரிஸ் | பளுதூக்குதல் |
| 6 | நிலூக்க கருணாரட்ண | பட்மின்ரன் |
| 7 | மெத்யூ டங்கன் அபேசிங்க | நீச்சல் |
| 8 | கிமிக்கோ ஷிஹாரா நஹீம் | நீச்சல் |
| 9 | சாமர நுவன் தர்மரட்ண | ஜூடோ |

## ஒரே பார்வையில் இறுதிப் பதக்கப் பட்டியல்...

| | நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 46 | 37 | 38 | 121 |
| 2 | பிரிட்டன் | 27 | 23 | 17 | 67 |
| 3 | சீனா | 26 | 18 | 26 | 70 |
| 4 | ரஷ்யா | 19 | 18 | 19 | 56 |
| 4 | ஜேர்மனி | 17 | 10 | 15 | 42 |

# நுண்ணறிவு – IQ

*01 தொடக்கம் 05 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தகவல்களுடன் தொடர்புபட்டவை.*

நந்தன், ராம், சுரேஸ், யனோ, நதியா ஆகிய ஐந்து நண்பர்களின் வயதுகள் பற்றிய பின்வரும் தகவல்களை ஆதாரமாகக்கொண்டு கிழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

- ☐ நந்தனின் வயது ராமின் வயதின் இருமடங்கிலும் பார்க்க ஏழினால் கூடியது.
- ☐ யனோ ராமின் தங்கையாவாள். அத்துடன் இரண்டு வயதினால் இளையவள்.
- ☐ சுரேஸின் வயது நந்தனினதும், ராமினதும் வயதுகளின் கூட்டுத்தொகைக்குக் சமன்.
- ☐ யனோவின் வயது சுரேஸின் வயதின் நான்கில் ஒன்றாகும்.
- ☐ நதியா ஏனைய எல்லோரிலும் பார்க்க மூத்தவளாக இருக்கும் அதே வேளை இரு ஆண்டுகளுக்கு முன்னர் அவருடைய வயது அவளிலும் சிறிதளவில் இளையவரின் தற்போதைய வயதிற்குச் சமம்.

01. நந்தனின் தற்போதைய வயது யாது?
02. ராமின் தற்போதைய வயது யாது?
03. சுரேஸின் தற்போதைய வயது யாது?
04. யனோவின் தற்போதைய வயது யாது?
05. நதியாவின் தற்போதைய வயது யாது?

*06 தொடக்கம் 10 வரையுள்ள ஒவ்வொன்றிலும்* **A,B,C,D,E** *என்னும் ஐந்து கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றிடையே மூன்று கூற்றுக்களை ஒரு குறித்த தருக்கத் தொடராக ஒழுங்குபடுத்தலாம். தருக்கத் தொடரைக் குறிக்கும் விடையைத் தெரிந்தெடுக்குக.*

06. A - மழை நீரை மாத்திரம் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ள முடியாது.
    B - விவசாயத்திற்கு பாசன நீர் இன்றியமையாததது.
    C - விவசாயத்திற்குத் தேவையான பல சூழற் காரணிகள் இலங்கையில் உண்டு.
    D - இலங்கை விவசாயத்தைச் சார்ந்திருக்கும் நாடாகும்.
    E - குளங்களைப் புனரமைப்புச் செய்தல் விவசாயத்திற்கு இன்றியமையாதது.

    1)ACD 2) BAE 3)DCB 4)EAD

7. A - சில அரசாங்க அலுவலர்களிடையே காணப்படும் ஊழல் காரண மாக அரசாங்க சேவை சீரழிந்துள்ளது.

B - அரசாங்க அலுவலர்களுக்குச் சம்பளம் பொது நிதியிலிருந்து வழங் கப்படுகின்றது.

C - அரச அலுவலர்களின் சேவை பாரபட்சமின்றி அளிக்கப்படவேண்டும்.

D - சில அரச அலுவலர்கள் நிருவாக ஊழல்களில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

E - அரசாங்க சேவையின் தரங்கள் சீரழிகின்றமையால் மக்கள் மிகவும் இடருறுகின்றனர்.

1) DAE 2) EAB 3) CDB 4) DCE

08. A - விண்ணப்பகாரர்களுக்கு பதிலெழுதுவதில் ஆர்வமிருப்பதில்லை.

B - விண்ணப்பகாரர்களுக்கு அனுப்பப்பட்ட முகவரியில் ஒரு தவறுண்டு

C - விண்ணப்பகாரர்களுக்குச் சரியான முகவரிக்குக் கடிதம் அனுப்பப் படவேண்டும்.

D - பதிலெழுதுவதில் ஆர்வம் கொண்டிராத விண்ணப்பகாரர்கள் தொழி லுக்கு ஒருபோதும் உகந்தவர்களல்லர்.

E - முகவரியில் உள் தவறு காரணமாக விண்ணப்பகாரர்கள் எதிர்பார்த்த வாறு பதிலெழுதவில்லை.

1) EDB 2) CDA 3) BEC 4) DEB

09. A - தீ காரணமாக ஒரு தொழிற்சாலை அழிந்துள்ளது.

B - தொழிற்சாலைகளில் தீ விபத்தைத் தடுப்பதற்கு தேவையான ஏற் பாடுகள் போதுமானவையல்ல.

C - தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் தீயணைத்தல் பற்றிய போதிய விளக்கத்தைக் கொண்டிருப்பதில்லை.

D - தொழிலாளர்களின் கவனயீனம் காரணமாக தொழிற்சாலை தீப்பற்றி சேதமடைந்துள்ளது.

E - தொழிற்சாலைக்குத் தீ விபத்துக் காரணமாக ஏற்பட்ட சேதம் ரூ80 மில்லியனாகும்.

1) BCE 2) EBA 3) ADE 4) DEC

10. A - இலங்கையில் ஒவ்வோர் அரசாங்கமும் வறுமையை ஒழிப்பதற்கு முயற்சியை மேற்கொண்டிருந்தது.

B - இலங்கை தற்போது இப்பிரச்சினையில் கூடுதலான கவனத்தைச் செலுத்தல்வேண்டும்.

C - இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சி போதியதன்று.

D - இலங்கையில் வறுமை மட்டம் மிக உயர்ந்ததாகும்.

E - இலங்கை வறுமையால் பீடிக்கப்பட்டுள்ள நாடாகும்

1) ACE  2) BED  3) CBE  4) EDC

*11* தொடக்கம் *15* வரையான வினாக்களில் தரப்பட்ட ஐந்து சொற்களில் ஒரு சொல் ஏனைய நான்கு சொற்களுடன் பொருந்துவதில்லை. அப்பொருந்தாத சொல்லைக் கண்டுபிடித்து புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.

11. 1) தாள் 2) பேனை 3) தூரிகை 4) பென்சில் 5) கோப்பு (.......)

12. 1) அறை 2) கூரை 3) சமயலறை 4) மண்டபம் 5) முற்றம் (.......)

13. 1) முடிவிடம் 2) அந்தம் 3) இறுதி 4) முதல் 5) முனை (.......)

14. 1) ஆணை 2) கட்டளை 3) அதிகாரச்சட்டம் 4) கட்டளைச்சட்டம் 5) முயற்சி (.......)

15. 1) கண் 2) மூக்கு 3) ஈரல் 4) செவி 5) நாக்கு (.......)

*16* தொடக்கம் *20* வரையான வினாக்கள் தரப்பட்ட அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. இதில் முதல் மூன்று நிரல்களும் ஒலியியைபு உடையவை. நிரல் S இல் உள்ளவை ஒரே எழுத்தில் ஆரம்பிக்கின்றன. ஏனைய விடயங்களை நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | P | Q | R | S |
|---|---|---|---|---|
| A | பந்து | நட்டம் | சாரம் | அகத்தி |
| B | கந்து | கட்டம் | தாரம் | அகழி |
| C | சந்து | மட்டம் | வாரம் | அகவம் |
| D | வந்து | பட்டம் | பாரம் | அகரம் |
| E | தந்து | தட்டம் | காரம் | அகல் |

16. நிரல் Q வில் சேர்க்க முடியாத சொல் எது?
1) சட்டம் 2) வட்டம் 3) அட்டம் 4) பதட்டம் (.......)

17. நிரல் S இல் சேர்க்க முடியாத சொல் எது?
1) அகவம் 2) அகடு 3) அகாலம் 4) அகழ் (.......)

18. நிரல் P யில் சேர்க்க முடியாத சொல் எது?

1) அந்து 2) மந்து 3) ஐந்து 4) ஜந்து (.......)

19. பின்வருவனவற்றுள் எது நிரல் E இல் இருக்கத்ததக்கது?


1) அசந்து, சட்டம், ஆரம், அகம்பு
2) திருந்து, விட்டம், ஈரம், அகம்
3) பந்தம், அசடம், அவதாரம், அகலியம்
4) பந்துரம், அவிட்டம், அபாரம், அகத்தியம் (.......)

20. பின்வரும் எந்த இரு சொற்களை இடைமாற்றலாம்?


1) (CQ) (CR) 2) (DR) (DS)
3) (BP) (DP) 4) (EQ) (ES) (.......)

பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையைக் காண்க.

21.





22.




23.

| | | |
|---|---|---|
| 7 | 24 | 5 |
| 9 | 65 | 4 |
| .... | .... | 3 |

24.




25.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 34 | 5 | 1 | 26 | 4 | 2 | 20 |
| 2 | 4 | 20 | 3 | 2 | 13 | 5 | 6 | ..... |

பின்வரும் வினாக்களுக்கு அடுத்துவரும் எண்ணையோ/இலக்கத்தினையோ காண்க.

26. 972, 324, 108, 36, .........

27. 1, 8, 27, 64, .........

28. 45, 42, 35, 32, 25, ...........

29. 144, 121, 100, 81, 64, ..........

30. A, C, E, G, I, ..........

**18.09.2016 இல் நடைபெறவுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல் வெளிவந்து விற்பனையாகிறது...**

**விடைகள்**

1) 37 2) 15 3) 52 4) 13 5) 54
6) 2(BAE) 7) 1(DAE) 8) 3(DAE)
9) 3 (ADE) 10) 4 (EDC) 11) 5
12) 5 13) 4 14) 5 15) 3 16) 4
17) 3 18) 3 19) 1 20) 3 21) 13
24) 56 25) 61 26) 12 27) 125
28) 22 29) 49 30) K

## ❒ பொலிஸ் திணைக்களத்தின் புதிய இலட்சினை -

▤ பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது வருட நிறைவை முன்னிட்டு நிர்மாணிக்கப்பட்ட இலட்சினை (02.08.2016) அண்மையில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டப்பட்டது.


- இவ் இலட்சினையின் பிரதான நிறம்

கருநீலமும், பிளாட்டினம் மற்றும் காக்கிச் சட்டை நிறம் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

- கருநீலம் - பொலிஸ் திணைக்களத்தின் நிறத்தை அடையாளப்படுத்துதல்
- பிளாட்டின நிறம் - 150 ஆவது வருட பூர்த்தியை அடையாளப்படுத்து வதாகும்.
- காக்கிச்சட்டை நிறம் - பொலிஸ் அதிகாரிகளின் சீருடையை அடை யாளப்படுத்துகின்றது.

---

## ❒ ஸ்கோர்பீன் -



⊙ இது இந்தியாவில் கடற்படைக்கென கட்டப்பட்டு வரும் நீர்மூழ்கிக் கப்பலின் பெயரே இதுவாகும். 66 மீற்றர் நீளமுடையது. 300 மீற்றர் ஆழம் வரை சென்று எதிரி யின் இலக்குகளைத் துல்லியமாக கணிக்க வல்லது. பிரான்ஸ் நாட்டின் நிறுவனம் (டி.சி.என்.எஸ் கப்பல் கட்டும் நிறுவனம்) ஒன்றுடன் இணைந்து இக்கப்பல் கட்டப்பட்டு வருகின்றது.

---

**18.09.2016 இல் நடைபெறவுள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமுர்த்தி) போட்டிப் பரீட்சையை முன்னிட்டு வீசப்பட்ட வலையின் விசேட வெளியீடு வெளிவந்து விற்பனையாகிறது...**



**நுண்ணறிவு வினா-விடைகள்**

**சமூக அபிவிருத்தி பற்றிய பொது அறிவு வினா-விடைகள், சமூக அபிவிருத்தி சார்ந்த பொது அமைப்புகள் பற்றிய விபரங்களும் உள்ளடங்கியுள்ளன...**

**விலை : 350/- மட்டுமே**

Valai வலை
சமகால பொது அறிவுத் தொகுப்பு

**இந்த வருடத்திற்கான வலையின் கடந்த மாதாந்த இழைகளை யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலையில் கிரமமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.**





தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல :- 0776913337
heyncharles@gmail.com